முற்பகல் 10.15

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரம்பத் துணைச் சுகாதார நிலையத்திற்கு கட்டிடம் கட்டி, அதை நிலை உயர்த்துவதற்காக நாம் நிதி ஒதுக்க வேண்டியிருக்கிறது. நிதிப் பிரச்சினையின் காரணமாகத்தான் படிப்படியாக கொஞ்சம் கொஞ்சமாக நாம் செய்து கொண்டிருக்கிறோம். எனவே, நிதிநிலைமைக்கேற்ப நடவடிக்கை எடுக்கலாம். அந்தக் குறிப்பிட்ட துணை சுகாதார நிலையத்தினுடைய பிரச்சினையை மனதிலே வைத்து அரசாங்கம் தனிக் கவனம் செலுத்தும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 345, திரு. மு. வெங்கடராம ரெட்டி, இருக்கையில் இல்லை. (குறுக்கீடு) அவர் தொகுதி சம்பந்தப்பட்ட வினா. (குறுக்கீடு) திரு. ஆர். சுந்தரம் கேட்கிறார், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

345—

போக்குவரத்துக் கழக ஊழியர்களுக்கு மலைப்பகுதிப்படி வழங்கல்

* 10031—திரு. மு. வெங்கடராம ரெட்டி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒசூர் மற்றும் தேன்கனிக்கோட்டை வட்டத்தின் அரசுப் பணியாளர்களுக்கு வழங்கும் மலைப்பகுதிப் படி (Hill Allowance) அன்னை சத்தியா ஊழியர்களுக்கு வழங்கப்பட்டது போல் ஏனைய போக்குவரத்துக் கழக ஊழியர்களுக்கு வழங்கப்படவில்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், மற்ற போக்குவரத்துக் கழக ஊழியர்களுக்கு வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஒசூர் மற்றும் தேன்கனிக்கோட்டை கிளை அலுவலகங்களில் பணிபுரியும் அன்னை சத்தியா போக்குவரத்துக் கழக ஊழியர்களுக்கு அடிப்படைச் சம்பளத்தில் 20 விழுக்காடுகள் மலைப்பகுதிப் படியாகவும், மற்றும் 5 விழுக்காடுகள் குளிர்காலப் படியாகவும் வழங்கப்பட்டது.

1993 ஏப்ரல் 15]

பின்னர், போக்குவரத்துக் கழக ஊழியர்கள் ஊதிய ஒப்பந்தப்படி ஊதியம் நிர்ணயிக்கப்படுவதால், அதனை ரத்துசெய்து 5 விழுக்காடு மலைப் பகுதிப்படி மட்டும் வழங்கப்படுகிறது.

(ஆ) மலைப்பகுதியில் பணிபுரியும் இராணி மங்கம்மாள் போக்குவரத்துக் கழகம், சேரன் போக்குவரத்துக் கழகம் மற்றும் பாண்டியன் போக்குவரத்துக் கழகம் போன்ற மற்ற அரசு போக்குவரத்து கழக ஊழியர்களுககும் மலைப்பகுதிப்படி வழங்கப்படுகிறது.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் வெங்கடராம ரெட்டி என்னிடத்திலே சொன்ன காரணத்தினால் இந்தக் கேள்வியை, நான் தொடர் கேள்வியாக கேட்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வழங்கப்படுகிறது என்று சொல்லியிருக்கின்றார்கள். ஆனால் அங்கே வழங்கப்படவில்லையென்று தெரிகிறது. அதை மீண்டும் பரிசீலனை செய்து, அது வழங்கப்படவில்லையென்றால், சரி செய்து உடனடியாக வழங்குவதற்கு முயற்சி எடுப்பாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 20 விழுக்காடுகள் என்பது அரசு அலுவலர்களுக்குப் பொருந்தும். ஆனால், போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கு 5 விழுக்காடுகள் இப்பொழுது வழங்கிக் கொண்டிருக்கிறோம். அதற்குக் காரணம் மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை அவர்களுடைய ஊதிய ஒப்பந்தம் பற்றி பேசுகிறபோது 5 விழுக்காடுகள் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அரசு அலுவலர்களுக்கு உள்ள விதிகள் இந்தப் போக்குவரத்துக் கழகத்திற்குப் பொருந்தாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 346, திரு. கு. லாரன்ஸ், திரு. ம. சின்னசாமி மற்றும் திரு. என். ஆர். சிவபதி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

346—

சென்னை—கன்னியாகுமரிக்குக் கப்பல் போக்குவரத்து.

*10748—திரு. கு. லாரன்ஸ் :

திரு. ம. சின்னசாமி :

திரு. என். ஆர். சிவபதி :

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னையிலிருந்து கன்னியாகுமரிக்கு பயணிகள் ஏற்றிச் செல்லும் கப்பல் போக்குவரத்து ஏற்படுத்த மத்திய அரசை மாநில அரசு வலியுறுத்துமா ?